சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - மானியக் கோரிக்கை அறிவிப்பு - தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நடத்திட அனுமதி அளித்தல் - தொடர் செலவினமாக பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/- வீதம் (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) 6218 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.5,59,62,000/-க்கு (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ 1-1) துறை

அரசாணை (நிலை) எண்.123

நாள் 25.08.2022
சுபகிருது, ஆவணி-9
திருவள்ளுவராண்டு-2053

படிக்கப்பட்டவை:

1. 2022-2023.ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை அறிவிப்பு எண்.01 நாள்.19.04.2022.
2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண். ஆ.மொ.4/ 3978/ 2022, நாள்: 04.05.2022.

----------

ஆணை:-

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 19.04.2022-ஆம் நாளன்று நடைபெற்ற 2022-2023.ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ் மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்திடும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் தமிழில் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நடத்திட

ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 9,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்படி அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள், மாணவர்களிடையே தமிழ்மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்தும் வகையிலும், தமிழுக்கு தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி, ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு 3 தமிழ்க்கூடல் நடத்திட ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9,000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வீதம் பள்ளிக் கல்வி இயக்குநர் வாயிலாக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள முதன்மை கல்வி அலுவலருக்கு வழங்கி அவ்வலுவலகம் வாயிலாக தற்போதுள்ள 6218 அரசு உயர்நிலை பள்ளி மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு வழங்கப்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

3. மேலும் இப்பணிக்கென ஒவ்வொரு பள்ளியிலும் பணியாற்றும் முதுநிலை தமிழாசிரியர் ஒருவரை அப்பள்ளியின் தலைமையாசிரியரால் நியமிக்கப்பெற்று தமிழ்க்கூடல் நிகழ்ச்சியினை நடத்தவும், மேலும், ஒவ்வொரு ஆண்டும் தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டமைக்கான செலவின விவரங்களையும், பயனீட்டுச் சான்றிதழையும் பள்ளிக் கல்வி இயக்குநர் வாயிலாக தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பிடக் கோரலாம் எனவும், எக்காரணத்தைக் கொண்டும் அத்தொகையினை பிற இனங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்பதையும், ஒவ்வோர் ஆண்டும் தமிழ்க்கூடல் நடத்தப்பெறுவதை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்து, ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பெறும் 3 தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகளை அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியரும் முதுநிலை தமிழாசிரியரும் கலந்து ஆலோசித்து முடிவுசெய்து கொள்ளும் வகையில் ஆணையிடப்பெறலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், மேற்படித்திட்டம் புதிய அறிவிப்பு என்பதால் அத்திட்டத்திற்கென 2022-2023ஆம் நிதியாண்டின் வரவு-செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பெறவில்லை எனவும், இத்திட்டத்திற்கான தொகை ரூ.5,59,62,000/-ஐ (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) 2022-2023ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் பெறத் தக்க வகையில் ஒப்பளிப்பு செய்யப்பெறலாம் எனவும். அவ்வாறு ஒப்பளிப்பு செய்யப்பெறும் தொகையை 6218 பள்ளிகளுக்கும் வழங்கப்பெறும் வகையில்

பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒப்பளிப்புச் செய்து பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பெறலாம் எனவும், அதற்கென தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களால் அளிக்கப்பெறும் பட்டியை சென்னை, சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) அனுமதிக்குமாறு ஆணையிடப்பெறலாம் எனவும் தெரிவித்து, மேற்காணும் கருத்துரு மீது உரிய ஆணை வெளியிட ஆவன செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், மேற்காணும் 2022–2023–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயற்படுத்தும்பொருட்டு, தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தமிழ்மொழியின் தொன்மை, இலக்கண இலக்கியங்கள் மீது பற்றும் ஆர்வமும் ஏற்படுத்தும் வகையிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் வகையிலும் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 6218 அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள தமிழ் மன்றத்தை மேம்படுத்தி ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுக்கு மூன்று தமிழ்க் கூடல் நடத்திட அனுமதி அளித்தும் மற்றும் அதற்கான செலவினங்களை மேற்கொள்ள தொடர் செலவின வகைப்பாட்டில் ஆண்டுதோறும் பள்ளி ஒன்றுக்கு ரூ.9000/– (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வீதம் 6218 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.5,59,62,000/–க்கு (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தொன்பது இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்படுகிறது.

I. தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்த ஒவ்வொரு பள்ளியிலும் முதுநிலை தமிழாசிரியர் ஒருவரை அப்பள்ளியில் தலைமை ஆசிரியர் அவர்கள் நியமிக்க வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பெறும் 3 தமிழ்க்கூடல் நிகழ்ச்சிகள் தொடர்பாக அந்தந்தப் பள்ளிகளின் தலைமை ஆசிரியரும் முதுநிலை தமிழாசிரியரும் கலந்து ஆலோசித்து முடிவுசெய்து கொள்ளப்பட வேண்டும்.

II. ஒவ்வோர் ஆண்டும் தமிழ்க்கூடல் நடத்தப்பெறுவதை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக பள்ளிக் கல்வி இயக்குநர் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

III. ஒவ்வோர் ஆண்டும் தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டமைக்கான செலவின விவரங்களையும், பயனீட்டுச் சான்றிதழையும் பள்ளிக் கல்வி இயக்குநர் வாயிலாக தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பிட வேண்டும், எக்காரணத்தைக் கொண்டும் அத்தொகையினை பிற இனங்களுக்கு பயன்படுத்தக் கூடாது

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2202 பொதுக் கல்வி – 05 மொழி வளர்ச்சி – 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் – மாநிலச் செலவினங்கள் – AL தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 359 பரிசுகளும் வெகுமதிகளும் – 01 பரிசுகளும் வெகுமதிகளும்"

IFHRMS (த.தொ.கு. 2202 05 102 AL 35901).

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.5,59,62,000/- 2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022-2023-ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2022-2023-ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகள், திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும், வரைவு விளக்கக் குறிப்பினையும் தவறாது உரிய நேரத்தில் நிதி (தவ (ம) செய்தித் துறை/வ.செ.பொ1.)த் துறைக்கு அனுப்பிவைக்குமாறு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்புச் செய்யப்பெறும் தொகையினை தமிழ் வளர்ச்சி இயக்குநர் பெற்று, பள்ளிக் கல்வி இயக்குநர் வாயிலாக தமிழ்நாடு முழுவதிலும் உள்ள முதன்மை கல்வி அலுவலருக்கு வழங்கி, அவ்வலுவலகம் வாயிலாக அனைத்து அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்க அனுமதி வழங்கப்படுகிறது. தமிழ் வளர்ச்சி இயக்குநரால் அளிக்கப்படும் பட்டியை 2022-2023-ஆம் ஆண்டுக்கான திருத்த/இறுதி திருத்த மதிப்பீட்டில் பெறத்தக்க வகையில் ஒதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி அனுமதிக்குமாறு சென்னை சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) அவர்களுக்குத் தெரிவித்து ஆணையிடப்படுகிறது.

9. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண். 40810/ நிதி(தவ (ம) செ)/ 2022, நாள் 23.08.2022-இல் பெறப்பட்ட

இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1019 (ஆயிரத்து பத்தொன்பது) உடனும் வெளியிடப்படுகிறது. IFHRMS ASL NO. 2022081019

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை-8.
இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம்.
(இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழியாக)
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம் வழியாக)
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை - 8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள
மேலாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை செயலாளர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிகல்வித் துறை, செயலாளர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதி(த.வ(ம)செ/ வ.செ.பொ.1 / 2/ வ.வ.I )த் துறை.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

25/8/22
பிரிவு அலுவலர்.
25.08.22